# உரிமமின்றி போத்தல் தண்ணீர் விற்பவர்களை மாநகர் மன்றம் அப்புறப்படுத்தியது



(நமது நிருபர்)

கோலாலம்பூர், மார்ச் 16–

ஜாலான் ராஜா சுற்றுப் பகுதியில் உரிமமின்றி போத்தல் தண்ணீர் விற்பவர்கள் தொடர்பில் அமலாக்க நடவடிக்கையை அமலாக்கத் துறை வாயிலாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் மேற்கொண்டது. தங்களை அமலாக்கத் தரப்பினர் கண்டுபிடித்து விடுவதைத் தவிர்க்க இவர்கள் எப்போதும் இடத்தை மாற்றிக் கொண்டிருப்பது குறித்து மேற்கொண்ட உளவு மற்றும் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டது.

வணிகப் பொருட்களை டத்தாரான் மெர்டேக்கா சுற்றுப் பகுதியிலுள்ள கட்டடத்தில் இவர்கள் மறைத்து வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பயன்படுத்தக்கூடிய வணிகப் பொருட்கள் பாதிப்படையும் வண்ணம் அப்படியே விட்டு விடுவதால் இவர்கள் விற்கும் தண்ணீரின் சுத்த நிலை மீது சந்தேகம் கொண்டு அசௌகரியமான பொதுமக்கள் கொடுத்த புகார்களின் அடிப்படையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வனைத்துப் பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டு செராஸ், தாமான் மிஹார்ஜாவிலுள்ள பறிமுதல் கிடங்கிற்குப் பதிவு மற்றும் ஆவணப்படுத்தலுக்காகக் கொண்டு செல்லப்பட்டதாக தனது முகநூலில் வெளியிட்ட அறிக்கையில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.